# ஹஜ்ஜு செய்வோர் கவனிக்க வேண்டியவை!

### ஹஜ்ஜின் நிபந்தனைகள் 6

1. முஸ்லிமாக இருத்தல்.
2. புத்தி சுவாதீனமாக இருத்தல்.
3. சுதந்திரமானவனாக இருத்தல் (அடிமையாக இல்லாதிருத்தல்)
4. பருவ வயதை அடைந்திருத்தல்.
5. உடல் வலிமையும் பணவலிமையும் பெற்றிருத்தல்.
6. ஒரு பெண் மஹரமுடன் (அனுமதிக்கப்பட்டவருடன்) ஹஜ்ஜு செய்தல்.

### 2. ஹஜ்ஜின் ருக்னுகள் நான்கு

1. இஹ்ராம் கட்டுவது.
2. அரஃபாவில் தங்குவது.
3. தவாஃப் இஃபாளா செய்வது.
4. ஸஃபா மர்வாவுக்கிடையே ஸஃயீ செய்வது.
5. தலைமுடி களைதல்.

இவற்றுள் ஏதேனும் ஒன்றை விட்டாலும் ஹஜ்ஜு நிறைவேறாது.

### 2. ஹஜ்ஜின் வாஜிபுகள் ஏழு

1. மீக்காத்து எல்லையிலிருந்து இஹ்ராம் கட்டுவது.
2. சூரியன் மறைவது (அஸ்தமனம்) வரை அரஃபாவில் தங்குவது.
3. முஸ்தலிஃபாவில் இரவு தங்குவது.
4. அய்யாமுத்தஷ்ரீக்உடைய நாட்களில் ( பிறை 11,12,13) மினாவில் தங்குவது.
5. மூன்று ஜம்ராக்களில் கல் எறிவது.
6. தலை முடியைச் சிரைப்பது அல்லது (முழுவதும்) வெட்டுவது.
7. தவாபுல் விதாஃ (பயண தவாஃப்)

இவற்றுள் ஏதேனும் ஒன்று விடுபட்டு விட்டால் பிராயச் சித்தமாக தமு கொடுக்க வேண்டும். இதன் மூலம் ஹஜ்ஜு நிறை வேறிவிடும்.

தமு என்பது மிருக பலியோ ஆறு ஏழைகளுக்கு உணவளிக்கவோ மூன்று நாட்களுக்கு நோன்பு நோற்கவோ செய்வதற்குச் சொல்லப்படும்...

### ஹஜ்ஜின் ஸுன்னத்துகள் எட்டு

1. இஹ்ராமின் போது குளித்தல்.
2. ஆண்கள் வெண்ணிறத்தில் இஹ்ராம் அணிதல்.
3. தல்பியாவை உரத்துக் கூறுதல்.
4. அரஃபா தின இரவில் மினாவில் தங்குதல்.
5. ஹஜ்ருல் அஸ்வதை முத்தமிடுதல்.

6. இள்திபா (உம்ராவுடைய தவாஃபில் அல்லது தவாஃபுல் குதூமில் இஹ்ராம் ஆடையின் ஓர் ஓரத்தை வலது புற அக்குளுக்குக் கீழால் கொண்டு வந்து இடது தோளில் போடுவது)

7. உம்ராவுடைய தவாஃபில் அல்லது தவாஃபுல் குதூமில் முதல் மூன்று சுற்றுக்களில் சற்று விரைந்து செல்லல்.

8. ஹஜ் கிரான் மற்றும் இஃப்ராத் செய்பவர்கள் தவாஃபுல் குதூம் செய்தல்.

(இவற்றில் எதையேனும் விட்டால் எந்தக் குற்றமுமில்லை)

### இஹ்ராமில் தடுக்கப்பட்டவை பதினொன்று. அவை:-

1. முடியை வெட்டுவது.
2. நகங்களைக் களைதல்.
3. ஆண்கள் தலையை மறைத்தல்.
4. ஆண்கள் தையலாடை அணிதல்.
5. வாசனைத் திரவியம் உபயோகித்தல்.
6. பெண்கள் கையுறைகள் அணிதல்.
7. பெண்கள் முகமூடி அணிதல்.

• இந்த ஏழு காரியங்களில் எதேனுமொன்றை ஒருவன் மறந்தோ அறியாமையிலோ செய்தால் அவன் மீது எந்தக் குற்றம மில்லை, வேண்டுமென்றே செய்தால் அதற்குப் பரிகாரம் செய்ய வேண்டும்.

8. தரைவாழ் விலங்குகளை வேட்டையாடுதல் அல்லது அதற்கு உதவுதல் அதை ஓரிடத்திலிருந்து வேறோர் இடத்திற்கு விரட்டுதல். அதை வேண்டுமென்றே கொலை செய்தால் அதற்குச் சமமான பரிகாரம் தேட வேண்டும்.

9. மனைவியை இச்சையுடன் கட்டியணைத்தல் இனவுறுப்புகளல்லாத பகுதிகளில் தொடுவது, முத்தமிடுவதைப் போல. இதனல் விந்து வெளிப்பட்டால் ஹஜ்ஜிற்குப் பாதகமில்லை. ஆனால் ஓர் ஒட்டகத்தைப் பலியிட வேண்டும்.

10. தனக்காவோ பிறருக்காவோ திருமண ஒப்பந்தம் செய்தல். இதை செய்தாலும் பரிகாரமொன்றுமில்லை.

11. இனவுறுப்புகளில் உறவுகொள்ளல். இது முதல் விடுபடுதலுக்கு முன்பு நிகழ்ந்தால் ஹஜ் நிறைவேறாது, மற்ற காரியங்களை முழுமைப்படுத்தி விட்டு அதற்குப் பகரமாக மறு ஆண்டு கட்டாயமாக ஹஜ்ஜைக் களா செய்ய வேண்டும். மேலும் ஓர் ஒட்டகத்தை பலியிட வேண்டும். இது முதல் விடுபடுதலுக்குப் பின்பு நிகழ்ந்தால் ஹஜ் நிறைவேறிவிடும். ஆனால் ஓர் ஆட்டைப் பலியிட வேண்டும்.

### பலியிடுதல்:

**பலியிடப்படுமிடம்:** மினா, மக்கா மற்றும் ஹரம் எல்லைக்குட்பட்ட பகுதி.

**பலியிடப்படும் காலம்:** பெருநாள் தினம், மற்றும் அதைத் தொடர்ந்த மூன்று தினங்கள்.

**பலிப்பிராணிகள்:** ஒட்டகம், மாடு, ஆடு (கம்பளி, செம்பறி)

**பிராணிகளின் வயது:** கம்பளி ஆட்டிற்கு ஆறு மாதம் ஆகியிருக்க வேண்டும். செம்மறி ஆட்டிற்கு ஓர் ஆண்டு ஆகியிருக்க வேண்டும். மாட்டிற்கு இரண்டு ஆண்டுகள். ஒட்டகத்திற்கு ஐந்தாண்டுகள். ஓர் ஆடு ஒருவர் சார்பாக மட்டும் தான் நிறைவேறும். ஒரு மாடு அல்லது ஓர் ஒட்டகம் ஏழு நபர்கள் சார்பாக நிறைவேறும். யாருக்கு பலிப்பிராணி கிடைக்கவில்லையோ அல்லது வாங்குவதற்கான வசதியில்லையோ அவர் ஹஜ்ஜின் நாட்களில் மூன்று, ஊருக்குத் திரும்பியதும் ஏழு என்ற கணக்கில்

மொத்தம் பத்து நோன்புகள் தொடர்ந்தோ விடுபட்டோ நோற்க வேண்டும்.

பலிப்பிராணிகளில் கூடாதவை: குருடு, நொண்டி, வியாதியுள்ளது, மெலிந்தது, கொம்பு உடைந்தது, காது அறுபட்டது.

### ஹாஜிகள் மனதிற் கொள்ளவேண்டியவை

1. அல்லாஹ்வுக்காக ஹஜ்ஜை நிறைவேற்றுவதாக (இக்லாஸான) தூய்மையான நிய்யத் வைப்பது.

2. ஹஜ்ஜு சம்பந்தமான சட்டவிதிகளை சரியான முறையில் தெரிந்துகொள்ளவேண்டும். இதில் தம் விருப்பப்படி செய்ய எவருக்கும் அனுமதி கிடையாது.

3. இதய பூர்வமாக பாவ இறைவனிடம் மன்னிப்புக் கோருவது.

### பாவமன்னிப்புக் கோருவற்குரிய விதிகள் நான்கு

1) செய்து வந்த பாவங்களை முற்றிலுமாக விடுதல்

2) அதற்காக மனமுருகுதல்

3) மீண்டும் அப்பாவங்களை செய்யவோ எண்ணவோ கூடாது என மன உறுதி கொள்ளல்.

4) பிறருக்குச்செலுத்தவேண்டிய (ஹக்குகளை) பாத்தியதைகளை உரியவர்களிடம் சேர்பித்தல்.

(அதாவது: பிறருக்குச் செலுத்தவேண்டிய ஹக்குகளை (கடமைகளை) நிறைவேற்றுவதும், அநியமாக அபகரிக்கப்பட்ட பொருட்களை உரியவரிடம் ஒப்படைப்பதும் கடன்களை வாங்கியவரிடம் திருப்பிக் கொடுப்பதும் அதற்காக சம்பந்தப்பட்டவரிடம் மன்னிப்புக்கோருவதும் ஹஜ்ஜு ஏற்கப்படுவதற்குரிய விதிகளாகும். (இவை நான்கும் தவ்பா ஏற்றுக்கொள்வதற்குரிய விதிகளாகும்.)

4. பெற்றோரின் திருப்தியைப்பெறுவதும் மனைவி கணவரின் அனுமதியைப் பெறுவதும் மிகவும் இன்றியமையாததாகும்.

5. ஹஜ்ஜு உமடராவுக்குரிய செலவுகள் யாவும் ஹலாலான முறையில் ஈட்டியதாக இருக்க வேண்டும்.

إِنَّ اللَّهَ طَيِّبٌ لَا يَقْبَلُ إِلَّا طَيِّبًا

நிச்சயமாக அல்வாஹ் தூய்மையானவன். தூய்மையானதைத் தவிர எதையும் ஏற்றுக் கொள்ளமாட்டான். என நாயகம் ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லம் அவர்கள் கூறினார்கள். அறிவிப்பவர்: அபூஹுரைரா (ரலியல்லாஹு அன்ஹு)

(ஆதாரம்: முஸ்லிம்)

6. வஸிய்யத் ஏதும் செய்வதாயின் எழுத்து பூர்வமாக இருக்க வேண்டும்.

7. எல்லோருடனும் நல்லுறவோடும் இண்க்கத்தோடும் நடந்து கொள்ள வேண்டும்.

8. ஹஜ்ஜுடைய அமல்களை பாழ்படுத்தும் வீணான எந்தச்செயலிலும் பேச்சிலும் பிறரைப்புண்படுத்துவதிலும் ஈடுபடாமலிருத்தல் வேண்டும்.

9. பயண ஒழுங்குகளை கடைபிடிக்கவேண்டும்.

10 கவனம் முழுவதும் வணக்க வழி பாடுகளில் இருக்க வேண்டும்.

11. நல்லவற்றைப் பேசுவதிலும், தாம் செயலாற்றுவதோடு மட்டுமின்றி பிறரையும் நல் அமல் செய்யத்தூண்ட வேண்டும்.

12. அய்யாமுத்தஷ்ஷரீக்குடைய நாட்களிலும், முஸ்தலிஃபாவிலும், குறிப்பாக அரஃபாவுடைய நாளிலும் அல்லாஹ்வை அதிகமதிகமாக நினைத்துப் பாவ மன்னிப்புக் கோருதல்.

13. சிறு தவறுகள் கூட நிகழா வண்ணம் தன்னைப் பேணிக் கொள்ள வேண்டும்.

14 இவ்விதிகள் யாவும் பேணப்பட்டால் அன்று பிறந்த பாலகனைப் போன்று பாவங்கள் மன்னிக்கப்பட்டு ‘ ஹஜ்ஜு மப்ரூராக ( ஒப்புக் கொள்ளப்பட்ட ஹஜ்ஜாக)’ ஏற்றுக் கொள்ளப்படும். ஹஜ்ஜு முடிந்ததும் தமது ஹஜ்ஜு ஏற்கப்பட்டு விட்டதாக இறுமாந்து விடவேண்டாம். மவ்த்து வரை உங்கள் அமல்களை எடை போட்ட பிறகே ஹஜ்ஜு ஏற்கப்படுவதும் ஏற்கப்படாததும் தீர்மானிக்கப்படும் என்ற இமாம் கஸ்ஸாலி(ரஹ்மதுல்லாஹி அலைஹி) அவர்களின் இந்த அறிவுரை இங்கே மிகவும் சிந்திக்கத்தக்கதாகும்.

**செய்யக்கூடாதவை :-**

1. முடியை வெட்டுதல் அல்லது பிடுங்குதல்

2. நகத்தை வெட்டுதல்

3. ஆண்கள் தலையை மறைத்தல்

4. நறுமணம் பூசுதல்

5. ஆண்கள் தையலுள்ள ஆடையை அணிதல் .

(குறிப்பு: தடுக்கப்பட்ட இவற்றுள் ஏதேனும் ஒன்றை வேண்டுமென்றே செய்தால் பிராய சித்தமாக ஒரு ஆ;ட்டை அறுத்துப்பலி கொடுக்கவோ, ஆறு ஏழை களுக்கு உணவு கொடுக்கவோ, மூன்று நாட்கள் நோன்பு நோற்கவோ செய்ய வேண்டும்.)

www.bathusha.com
Tamil Islamic Online Radio 24h

**உண்மையும் நன்மையும் உன்னிலும் என்னிலும் உண்டாகட்டும்**

**AL ALIM S.A.M.SEYED JAHAN MOWLANA HUSAINY JALALIY**

**BATHUSHA.COM**